பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187, ආඩියපාදම් පාර, දිරුනෙල්වේලි, යාපනය
Website: www.np.gov.lk 187, Adiyapatham Road, Thirunelvely, Jaffna e-mail:npcs@sltnet.lk

My No:-NP/09/FRM/ 2012 25.04.2012

மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல:- PT/06/2012

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## அரச உத்தியோகத்தர்களிற்கான தொடர்பாடல் பட்டியல்களைத் தீர்வு செய்தல்

மேற்படி விடயம் தொடர்பான நிதி அமைச்சின் 446ம் இலக்கமும் 2010.09.01ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

1. மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம், 01.04.2012ம் திகதி முதல் பின்வரும் உத்தியோகத்தர்களிற்கு தத்தமது கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு சகல வரிகள் மற்றும் மாதாந்த கட்டணங்கள் உள்ளிட்ட தொலைபேசி மற்றும் இணையத்தள வசதிகளை கீழ்க்குறிப்பிட்ட மாதாந்த ஒருங்கிணைந்த செலவின எல்லைக்குள் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்படுகின்றது.

| இல | உத்தியோகத்தர் குழாம் | மாதாந்த ஒருங்கிணைந்த செலவின எல்லை |
|---|---|---|
| 1 | மாகாண பிரதம செயலாளர் | 20,000/= |
| 2 | மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் | 12,500/= |
| 3 | மாகாண திணைக்களத் தலைவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் | 8,000/= |
| 4 | உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், வைத்திய அத்தியட்சகர்கள், வைத்திய அதிகாரிகள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள் | 6,000/= |
| 5 | மாகாணப் பிரதம செயலாளரால் அனுமதிக்கப்படுகின்ற ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 4,000/= |

2. 2012ம் ஆண்டிற்கு மேற்படி கொடுப்பனவுகளிற்காக தங்களிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுத் தொகைக்கேற்ப தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களிற்கு உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும். இக் கொடுப்பனவு தொடர்பாக மேலதிக நிதி ஒதுக்கீடுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

3. அத்துடன், புதிய தொலைபேசி இணைப்புக்கள் பொருத்தப்பட வேண்டிய தேவை இருப்பின் பிரதம செயலாளர் அவர்களின் அனுமதி கட்டாயம் பெறப்படல் வேண்டும்.

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர் R.Wijialudchumi (Mrs)
வட மாகாணம் Chief Secretary
Northern Province

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம் - வ.மா

} தகவலுக்காக

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary } 021 2220843
அலுவலகம் / කාර්යාලය / Office } 021 3202285
தொலை நகரி / ෆැක්ස් / Fax } 021 2220[illegible]